மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை எடுத்ததற்குப் பிறகுதான் வியாபாரம், பயன்பற்றிச் சொல்ல வேண்டும். ஆராய்ச்சிபற்றித்தான் பதில் சொன்னேன். அப்படிப்பட்ட முயற்சி இல்லை என்று சொன்னேன்.

Preventing benami loan transactions in Co-operative Societies.

* 622 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to amend the Co-operative Societies Act with a view to prevent benami loan transactions taking place in the Co-operative Credit Societies?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்போது நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சட்டத்தில் 64, 65, 71 ஆகிய பிரிவுகளின்கீழ் போதிய அதிகாரம் இருக்கிறது. எனவே, சட்டத்தை இப்போது திருத்தத் தேவையில்லை.

திரு. என். கே. பழனிசாமி: பெருவாரியான க்ரெடிட் சொசைடிகளில் தலைவர்கள் பினாமியாக பல பேர்மீது கடன் போட்டு அதை எடுத்துக்கொள்கிறார்கள். அதைக் குறிப்பிட்ட நேரத்தில் கட்டுவது இல்லை என்ற காரணத்தால் பல சொசைடிகள் ஃபங்ஷன் பண்ணாமல் இருக்கின்றன. ஆகவே, சர்க்கார் இப்போது இருக்கும் முறையை மாற்றி லோன் விண்ணப்பம் போடுபவர்கள் நேரடியாக வந்து பணத்தை வாங்குவதற்கான முறையை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்போது கடன் விண்ணப்பம் போடுவதும், கடன்களை விநியோகம் செய்வதும் நேரடியாகத்தான் நடக்கிறது. அரசாங்க அதிகாரிகூட இருந்து விநியோகம் நடக்கிறது. இதிலே தவறுதல் நடக்குமானால் சீர்திருத்தம்செய்ய இப்போதுள்ள சட்டத்திலேயே இடம் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போதுள்ள சட்டத்தில் இடம் போதவில்லை என்ற நிலையில்தான் பல பேர் பினாமியாகப் பணத்தை வாங்கிக்கொண்டு டௌட்ஃபுல் டெட்ஸ்—மீளாக் கடன் பல லட்சக்கணக்கான ரூபாய் கூட்டுறவுத் துறையிலே ஏற்படுகிறது. ஆகவே, லோனுக்கு அப்ளிகேஷன் போடும் போது ஃபோட்டோ வைக்க வேண்டுமென்றும், தலைவர் கையில் அதிகாரம் இருக்கக்கூடாது என்ற முறையிலும் சீர்திருத்தம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஒவ்வொரு மனுவிலும் போட்டோ வைக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குரிய செலவை யார் கொடுப்பது? ஏழை எளியவர்கள் போட்டோ பிடித்து வைக்க பண வசதி இருக்கிறதா என்பது கேள்வி. தவறுதல் நடக்குமானால் இப்போதுள்ள சட்டத்திலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய அதிகாரம் இருக்கிறது. கேள்வி, சட்டத்தைத்திருத்த வேண்டுமா என்பது. திருத்தாமலே போதிய அதிகாரம் இருக்கிறது என்று விடை சொன்னேன்.

1973 ஏப்ரல் 3]

திரு. சோ. அழகர்சாமி : இப்போதே பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்களில் பினாமியாகக் கொடுப்பது, வாங்குவது என்பது அதிகமாகி விட்டது. இதைத் தடுக்க எவ்வளவு சட்டங்கள் இருந்தாலும் நிர்வாகத்தில் இருப்பவர்கள் தடுக்க முடியவில்லை ஆகவே, சந்தானம் கமிட்டி சிபாரிசு அடிப்படையில் மூன்று ஆண்டுக் காலத்திற்குப் பதவியில் இருந்த பிறகு, இரண்டு பீரியடுக்குப் பொறுப்புக்கு வரக்கூடாது என்ற முறையில் ஏற்படுத்தினால் இதைத் தடுக்க முடியும். அதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சந்தானம் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது என்றால் தவறு செய்பவர்கள்மீது இந்தியன் பீனல் கோட் படி நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது, அதைக் கூட்டுறவுச் சட்டத்திலும் சேர்த்துவிட வேண்டுமென்று. பணத்தைத் திரும்பப் பெற கூட்டுறவுச் சட்டத்திலேயே இடம் இருக்கிறது. பீனல் கோடில் கிரிமினல் நடவடிக்கை எடுக்க இடம் இருக்கிறது.

திரு கு. இராசமாணிக்கம் : *1960-61-ஆம்* ஆண்டுகளில் தீவிரச் சாகுபடித் திட்டத்திற்காக கொடுக்கப்பட்ட கடன்கள் இதுவரை வசூல் ஆகவில்லை. விவசாயிகளுடைய நிலைமையைப் பார்த்து அப்பேர்ப்பட்ட கடன்களை அரசு ரத்து செய்யுமா ? (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு. ஜே. ஜேம்ஸ் : இம்மாதிரியான பினாமி டிரான்சாக்‌ஷன்களைத் தடுக்க போதுமான சட்டம் இருந்தாலும்கூட செயலாற்றுகின்ற முறையில் இருக்கும் கஷ்டத்தின் காரணமாகத் தவிர்க்க முடியவில்லை. அதற்காகத்தான் அம்மையார் அவர்கள் கோரியதுபோல் ஒவ்வொரு அப்ளிகேஷனிலும் ஃபோட்டோவைச் சேர்த்துக் கொண்டால் ஆள் மாறாட்டத்தைத் தடுக்க முடியும். அந்த முறையை அரசாங்கம் கையாள முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆள் மாறாட்டம் செய்வது என்பது கூட்டுறவுச் சட்டத்தில் குற்றம் என்பது மட்டுமல்ல, இந்தியன் பீனல் கோட் படி பெரிய குற்றமாகக் கருதப்படுகிறது. சந்தானம் கமிட்டி பீனல் கோடில் இருக்கும் பிரிவைக் கூட்டுறவுச் சட்டத்திலும் சேர்த்துக்கொண்டால் நல்லது என்று கூறிற்று. பீனல் கோடிலேயே இடம் இருப்பதால் அது தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது. இப்போது 50 ரூபாய்கூடக் கடன் கொடுக்கிறோம். அதற்கெல்லாம் போட்டோ வைக்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக நடைமுறையில் சாத்தியமாக இருக்காது.